8068/2008
010646

E2(4)

பதிவஞ்சல் மூலமாக:

ந.க.எண்:39227/நி2/4/2020

மருத்துவக்கல்வி இயககககம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
நாள்:24.05.2021.

தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தஞ்சாவூர். 03 JUN 2021

பொருள் : நிர்வாகம் - திரு.J.பிரபு த/பெ.(லேட்).திரு.A.ஜான், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்து அரசாணை மற்றும் அசல் சான்றுகள் பெறப்பட்டுள்ளது - சார்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை : 1. தங்கள் அலுவலக கடித ந.க.எண்:8068/நி2/2008, நாள்:13.07.2020 மற்றும் 17.10.2020.

2. அரசாணை (2ப) எண்:83, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை, நாள்:23.04.2021.

3. அரசு கடித எண்:37027/ஏடி2/2020-3, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:23.04.2021.

*******

திரு.J.பிரபு த/பெ.(லேட்).திரு.A.ஜான், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் அவர்களின் பணியினை வரன்முறை செய்து பார்வை 2-ல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பார்வை 3-ல் காணும் அரசு கடிதத்தில் தனியரின் கீழ் காணும் அசல் சான்றுகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மற்றும் அசல் சான்றுகள் இக்கடிதத்துடன் இணைத்து அனுப்பபடுகிறது. அவற்றை தனியருக்கு உரிய முறையில் சார்பு செய்து பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

1. இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.J.பிரபு அவர்கள் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த கடிதம், நாள்:14.07.2008.
2. பிற வாரிசுதாரர்களின் மறுப்பின்மை சான்று. (3 நபர்கள்) (அசல்).
3. 17 கலம் கொண்ட முறைப்படுத்தப்பட்ட கடிதம்.(அசல்)
4. பணிநியமன ஆணையின் நதல்.
5. அரசு ஊழியரின் இறப்பு சான்றிதழ் (அசல்)
6. வாரிசு சான்றிதழ் (அசல்)

7. வறியநிலைச் சான்றிதழ் (கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்றிதழ். (அசல்)
8. விண்ணப்பதாரரின் கல்வி சான்றிதழ் (S.S.L.C.,) (அசல்)
9. கல்வி சான்றுகளின் உண்மை தன்மை அறியும் சான்று. (அசல்)
10. மாற்றுச் சான்றிதழ் (அசல்)
11. விண்ணப்பதராரின் உறுதிமொழி (அசல்)
12. சாதிச்சான்றிதழ் (அசல்)
13. அரசு கடிதம் எண்:2941/க்யூ1/94-1 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 01.03.1994 இன்படி பணி வரண்முறை செய்ய குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கோப்பு அனுப்பபட்டதற்கான சான்று (அசல்.).

மேலும் மேற்காணும் அசல் மூலச்சான்றுகளை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையினை இக்கடிதம் கிடைக்கபெற்ற 3 தினங்களுக்குள் தவறாது அனுப்பி வைக்குமாறும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ப.சரத்பாபு
அரசு இணை செயலாளர் /
இணை மருத்துவக்கல்வி இயக்குநர் (நிர்வாகம்)

பெறுநர் :

1. [illegible].பிரபு, இளநிலை உதவியாளர். (உரிய வழியாக)
2. முதல்வர்,
தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை,
தஞ்சாவூர்-613 004.
3. மாநில கணக்காயர், சென்னை-18.

உண்மை நகல் / ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

கண்காணிப்பாளர்.

நிருவாக அலுவலர்
த.ம.க. மருத்துவமனை,
தஞ்சாவூர்.

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி –கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.ஜா.பிரபு (த/பெ. (லேட்) அ.ஜான்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து –ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி2) துறை**

மருத்துவக் கல்வி இயக்ககம் தபால் பிரிவு 4 MAY 2021 சென்னை-10

அரசாணை (2ப) எண்.83 நாள் : 23.04.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052

பிலவ,சித்திரை – 10

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.
2. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.39227/நி2/4/ 2020, நாள் 08.12.2020.

******

**ஆணை:-**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சமையலராக (Cook) பணியாற்றிக் கொண்டிருந்த போது, திரு.அ.ஜான் என்பவர் 05.07.2007 அன்று பணியிடையே மரணமடைந்துவிட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 15.07.1953 என்றும் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.07.2013 என்றும், இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.ஜா.பிரபு என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 14.07.2008 நாளிட்ட மனுவின் மூலம் விண்ணப்பித்துள்ளார் என்றும், இவரின் பிறந்த தேதி 07.12.1991 ஆகும் என்றும், அரசு ஊழியர் இறந்த நாளான 05.07.2007 அன்று தனியரது வயது 18 ஆண்டுகள் நிறைவு செய்யவில்லை என்று மருத்துவக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், திரு.ஜா.பிரபு கருணையடிப்படையில் பணிநியமனம் பெற போதிய கல்வித் தகுதி பெற்றிருந்ததாலும், மூன்றாண்டு காலக்கெடுவுக்குள் விண்ணப்பம் சமர்ப்பித்திருந்ததாலும், குடும்பம் வறுமை சூழலில் உள்ளது என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்தில் எவரும் அரசு / தனியார் துறையில் பணியில் இல்லை என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்திற்கு அசையும் / அசையாச் சொத்துக்கள் ஏதுமில்லை என்று தஞ்சாவூர் வட்டாட்சியர் சான்றளித்திருந்ததாலும், மனுதாரர் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற ஆட்சேபம் இல்லை என அரசு ஊழியர் குடும்பத்தில் இதர நபர்கள் எழுத்து மூலமாக தெரிவித்திருந்ததாலும், மற்றும் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற இதர நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்ததாலும், மனுதாரர் திரு.ஜா.பிரபு என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, அவர் 14.06.2019 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார் என தெரிவித்து, தனியர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 14.06.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

[த.பி.பா]

3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, தனியர் திரு.ஜா.பிரபு, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 14.06.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சட்டம், 2016 பிரிவு 20 (6) (b) (வயது குறித்த தளர்வு) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2) (பணப்பலன்கள்) ஆகியவற்றை, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58–ன்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தனியர் பொருட்டு தளர்த்தி, திரு.ஜா.பிரபு, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 14.06.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.கு.எண்.5565/Q1/2021-1, நாள்17.03.2021 மற்றும் அ.சா.கு.எண். 9870/Q2/2021-1 நாள் 21.04.2021 –இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்விஇயக்குநர், சென்னை–600 010.
திரு.ஜா.பிரபு, இளநிலை உதவியாளர் (உரியவழியாக)
மாநிலகணக்காயர், சென்னை–600 018.
நகல்
தொழிலாளர்மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை– 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை– 600 009.
மக்கள்நலவாழ்வுமற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்புகோப்பு / உதிரிநகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//-

பிரிவு அலுவலர்

ந.க. எண் :- 8068/இ1/2008 நாள் .6.21

மருத்துவக் கல்வி இயக்குனர் அவர்களின் கடிதத்துடன் வரப்பெற்ற இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்த அரசு ஆணை(அ)

இணைத்து அனுப்பப்படுகிறது.

பெறுநர்
திரு. ஜா. பிரபு, இளநிலை உதவியாளர்
த.ம.க. மருத்துவமனை
தஞ்சாவூர்
அலுவலக கண்காணிப்பாளர் (ஸ்) வழியாக

நிருவாக அலுவலர்
த.ம.க. மருத்துவமனை,
தஞ்சாவூர்.